1993 ஏப்ரல் 7]

கின்ற விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்பெறுகிறது. இதுவரை 30 விவசாயிகள் பயிற்சிபெற்று பலன் அடைந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பயிற்சியை தென் ஆற்காடு மாவட்டத்திலே தொடங்கப்படுமா என்பதனை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்திலே உள்ள மக்கள் இந்த பயிற்சியைப் பெற வர விரும்புவார்கள் என்று சொன்னால் அவர்களுக்கு அருகிலே இருக்கக் கூடிய செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே பயிற்சி அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 277, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

277—

தருமபுரி மாவட்டப் பகுதிகளில் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்கள்.

*14537—திரு. கா. பூ. முனுசாமி:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், கிருட்டிணகிரி, காவேரிப்பட்டினம் பகுதிகளில் அதிக விளைச்சல் தரும் தென்னை மரங்கள் பூச்சிகளால் பாதிக்கப்பெற்றுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தருமபுரி மாவட்டம், காவிரிப்பட்டினம், கிருட்டிணகிரி பகுதிகளில் உள்ள தென்னை மரங்கள், பூச்சிகளாலும், நோயினாலும் கடுமையான நிலையில் பாதிக்கப்படவில்லை.

[1993 ஏப்ரல் 7

எனினும், 7.5 சதவீதப் பகுதிகள் கருந்தலை வண்ணத்துப் பூச்சிகளின் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளது. நோய்களினால் பாதிப்பு ஏதும் காணப்படவில்லை.

(ஆ) கருந்தலை வண்ணத்துப் பூச்சிகளின் தாக்குதலை தடுப்பதற்கு வேளாண்மைத் துறையால் ஒட்டுண்ணிகள் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒரு சில பூச்சிகள் தாக்குவதால் கிட்டத்தட்ட 40 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் தென்னை மரங்களின் ஓலைகள் பச்சைத் தன்மை பாதிக்கப்பட்டு பெரிய அளவிலே, ஒரு தென்னம் குலையில் 15 காய்கள் விழுகின்றன என்று சொன்னால், இந்த நோயால் பாதிக்கப்பட்டால்.........

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. கா. பூ. முனுசாமி : 4 அல்லது 5 தேங்காய்கள்தான் விழுகின்றன. எனவே, அந்தப் பூச்சிகளை ஒழிக்கக்கூடிய ஒட்டுண்ணிகள் அரசாங்கத்தால் விடப்படுகின்றன. அதைக் கூடுதலாக விடுவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக நல்ல பலன் கிடைக்கும். எனவே, கூடுதலான அலுவலர்களை நியமித்து, கூடுதலான ஒட்டுண்ணிகளை அரசு விடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் என்பது வேறு, பூச்சிகளால் தாக்கப்படுவது என்பது வேறு. பூச்சிகளால் தாக்கப்பட்ட அந்தத் தென்னை மரங்களிலிருந்த பூச்சிகளை அழிப்பதற்கு இன்றைக்கு ஒட்டுண்ணிகள் விடப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கருத்தை ஏற்று, ஆய்வு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் தேவையான ஒட்டுண்ணிகளை அந்தப் பகுதியில் விடுவதற்கு அரசு பரிசீலிக்கும்.

திரு. கா. பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பூச்சிகளால் தென்பெண்ணை ஆற்றங்கரையில் குறிப்பாக காவிரிப்பட்டினத்திலிருந்து அரசப்பட்டி வரையில் உள்ள கிட்டத்தட்ட 50 ஆயிரம் மரங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன, இந்தத் தென் பெண்ணை ஆற்றினுடைய நீர் பாய்கின்ற பகுதியில்தான் இதுபோன்ற பூச்சிகள் அதிகமாக தென்படுகின்றன. எனவே, நீரில் வேறு ஏதாவது நச்சுத்தன்மை

கலந்திருக்கிறதா என்பதை அறிவியல் ஆய்வு மூலமாக தெரிந்து, அதற்காக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மரங்களை தாக்கக்கூடிய நோய் தஞ்சை வாடல் மற்றும் கேரளா வாடல் நோய். இந்த இரண்டு நோய்கள் தாக்கினால்தான் அதிக சேதம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை ஏற்று அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலுள்ள அந்தத் தென்னை களுக்கு எந்த நோய் பரவியிருக்கிறது, எந்த நோய் ஆற்றினுடைய நீரின் தன்மையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது, அல்லது பூச்சிகளால் தாக்குண்டிருக்கிறது என்பதை ஆய்வு செய்து அதன் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 278, திரு. எம். ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை.

வினா எண் 279, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

279—

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் மீன் வளர்ச்சி சிறப்புத் திட்டங்கள்.

*10376—டாக்டர் ஜெ. பரந்தாமன் :

மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் பல ஏரி களில் நீர்மட்டம் பெருமளவு உயர்ந்து இருப்பதால் மீன் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS